1979 அக்டோபர் 31]

காக முடக்கி வைக்கப்போவதில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அங்கு இருக்கக் கூடிய ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தனக்கு பட்டத்தைப் போட்டுக் கொண்டிருப்பதாகவும், 'கொடுமுடிகண்ட கோமகன்' என்றும் 'கொற்றவன்' என்றும் போட்டுக்கொண்டிருப்பதாக சொன்னார்கள். இப்போதெல்லாம் அரசியலில் அவர்களுக்குள்ளேயே தங்களுக்கு வேண்டிய தகுந்த பட்டங்களை உருவாக்கிக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு இங்கு இருக்கக் கூடிய உறுப்பினர்கள் உதவி செய்ய மாட்டார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இது மத்திய அரசோ அல்லது மாநில அரசோ கொடுக்கவில்லை. அவரால் போட்டுக்கொண்ட பட்டமாக இருக்கலாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்னங்கன்றுகள் உற்பத்தி.

* வினா 56.—திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வீரிய ஒட்டு தென்னை சாகுபடி திட்டத்தின் கீழ் அரசு தென்னை ஆராய்ச்சி பண்ணைகளில் ஆண்டொன்றுக்கு எவ்வளவு தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன?

(ஆ) எந்த அடிப்படையில் விற்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

விவர அறிக்கை* அவை முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

சின்னசேலம் மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம்

* வினா 57—திரு. துரை முத்துசாமி, திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் சின்னசேலம் அரசினர் மருத்துவ மனைக்கு சொந்தமாக புதுக்கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) & (ஆ) ஐம்பத்தாறு படுக்கைகள் கொண்ட வட்டத் தலைமையிட மருத்துவமனை 15 கி. மீ. தொலைவில் உள்ள கள்ளக்குறிச்சியில் இருப்பதாலும், தற்போது சின்னசேலம் அரசு மருந்தகம் இயங்கி வரும் இடத்தில் புதிய கட்டிடங்கள் கட்ட போதுமான இடம் இல்லையென்பதாலும், புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

[715-716ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.[